# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் ரூ.9.95 லட்சம் மதிப்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

## கன்னியாகுமரி மாவட்ட கலெக்டர் ஆர்.அழகுமீனா வழங்கினார்



**கன்னியாகுமரி.ஜூலை.15-** கன்னியாகுமரி கலெக்டர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில், கலெக்டர் ஆர்.அழகுமீனா, தலைமையில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

நேற்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொது மக்களிடமிருந்து கல்வி உதவித்தொகை, பட்டா பெயர் மாற்றம், மாற்றுத்திறனாளி நல உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, குடிநீர் வசதி, சாலை வசதி, கலைஞர் மகளிர் தொகை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் கோரி 404 கோரிக்கை மனுக்கள் இன்று பெறப்பட்டது. பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து தீர்வு காணுமாறு கலெக்டர் ஆர்.அழகுமீனா, துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள். அதனைத்தொடர்ந்து மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் முதலமைச்சரின் விரிவான காப்பீட்டு திட்டத்தின் கீழ் 6 மாற்றுத்திறன் பயனாளிகளுக்கு ரூ.9.95 மதிப்பில் செயற்கை கால்களையும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர், வட்டார வளர்ச்சி அலுவலர்களின் பயன்பாட்டிற்கு 8 புதிய ஈப்புகளை கலெக்டர் ஆர்.அழகுமீனா, வழங்கினார்கள்.

நடைபெற்ற கூட்டத்தில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோணி பெர்னான்டோ, தனித்துணை ஆட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம் சேக்அப்துல் காதர், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் தினேஷ் சந்திரன், துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# குற்றாலம் சாரல் திருவிழா நிர்வாக காரணங்களுக்காக வரும் 20-ந் தேதி தொடங்கி 27ல் நிறைவடைகிறது : கலெக்டர் தகவல்

**தென்காசி ஜூலை.15-** தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் (19.07.2025) முதல் (27.07.2025) வரை நடைபெற இருந்த சாரல்திருவிழாவானது நிர்வாக காரணங்களுக்காக (20.07.2025) முதல் (27.07.2025) வரை நடைபெறவுள்ளது என தேதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், தகவல்.

தென்காசி மாவட்டம், குற்றாலத்தில் மழைக்கால சீசன் தொடங்கி நடைபெற்று வரும் நிலையில், மழைக் கால சீசன் காலகட்டங்களில் வருடம் தோறும் நடத்தப்படும் சாரல் திருவிழாவானது வருகின்ற(19.07.2025) முதல் (27.07.2025) வரை நடைபெறவுள்ளதாக அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், தற்போது அதில் சிறிய மாற்றம் செய்யப்பட்டு நிர்வாக காரணங்களுக்காக (20.07.2025 ) முதல் சாரல் திருவிழா தொடங்கும் எனவும், (20.07.2025) முதல் (27.07.2025) வரை சாரல் திருவிழா நடைபெறும் எனவும், அதே போல், ஐந்தருவி சுற்றுச்சூழல் பூங்காவில் மலர் கண்காட்சி (20.07.2025) முதல் (23.07.2025) வரை நடைபெறும் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், தெரிவித்துள்ளார்.

# குலசை முத்தாரம்மன் கோவில் தசரா திருவிழா: பக்தர்கள் விரதம் வரும் 25ம் தேதி தொடங்குகிறது

**திருச்செந்தூர் ஜூலை .15-** குலசேகரப்பட்டினம் முத்தாரம்மன் கோவிலின் தசரா திருவிழாவை முன்னிட்டு பக்தர்களின் 101 நாள் விரதம் வருகிற 25ஆம் தேதி தொடங்குகிறது.

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள குலசேகரப்பட்டினத்தில் முத்தாரம்மன் கோவிலில் தசரா திருவிழா ஒவ்வொரு ஆண்டும் கோலாகலமாக நடைபெறும். திருவிழாவை லட்சக்கணக்கான பக்தர்கள் தரிசனம் செய்வர். நடப்பாண்டில் தசரா பெருந்திருவிழா வருகிற செப்.23ஆம் தேதி (செவ்வாய்க்கிழமை) அன்று கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

தசரா திருவிழாவை முன்னிட்டு, பக்தர்கள் மாலை அணிந்து விரதம் இருந்து காளி, அம்மன், சிவன், கிருஷ்ணர், முருகன், விநாயகர் போன்ற சாமி வேடங்கள் மற்றும் குறவன், குறத்தி, போலீஸ், குரங்கு, கரடி, சிங்கம், புலி போன்ற பல்வேறு வேடங்கள் அணிந்து நேர்த்திக்கடன் செலுத்துவார்கள். காளி வேடம் அணிபவர்கள் 41 நாள்களுக்கு மேலாக விரதம் இருக்க தொடங்குவார்கள். பெரும்பாலும் மற்ற வேடம் அணிபவர்கள் கொடியேறும் நாள் அன்று மாலை அணிந்து 11 நாள் விரதம் இருப்பர்.

இந்த நிலையில், குலசை முத்தாரம்மன் கோவிலில் தசரா திருவிழாவிற்கு 101 நாள் விரதம் வருகிற 25ஆம் தேதி தொடங்குகிறது. மேலும், 51 நாள் விரதம் 14.08.2025 (வியாழக்கிழமை), 48 நாள் விரதம் 17.08.2025 (ஞாயிற்றுக்கிழமை), 41 நாள் விரதம் 24.08.2025 (ஞாயிற்றுக்கிழமை), 31 நாள் விரதம் 03.09.2025 (புதன்கிழமை), 21 நாள் விரதம் 13.09.2025(சனிக்கிழமை), 11 நாள் விரதம் 23.09.2025(செவ்வாய்க்கிழமை) தொடங்கும் என்று தகவல் வெளியாகி உள்ளது.

# தென்காசி மாவட்டத்தில் 282 உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற உள்ளது: கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் தகவல்

**தென்காசி ஜூலை.15:** தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் தமிழ்நாடு முதலமைச்சர் இன்று தமிழ்நாடு முழுவதும் உங்களுடன் ஸ்டாலின் முகாமினை தொடங்கி வைப்பதை முன்னிட்டு தென்காசி மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் முன்னேற்பாடு பணிகள் குறித்து செய்தியாளர்கள் சந்திப்பு கலெக்டர் ஏ. கே. கமல் கிஷோர், தலைமையில் நடைபெற்றது.

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் தமிழ்நாடு முதலமைச்சர் இன்று தமிழ்நாடு முழுவதும் " உங்களுடன் ஸ்டாலின்" முகாமினை தொடங்கி வைப்பதை முன்னிட்டு தென்காசி மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் முன்னேற்பாடு பணிகள் குறித்து செய்தியாளர்கள் சந்திப்பு கலெக்டர் ஏ. கே. கமல் கிஷோர், தலைமையில் நடைபெற்றது.பின்னர் கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர், தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அறிவிப்பின்படி தென்காசி மாவட்டத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் இன்று புளியங்குடி நகராட்சியில் வார்டு எண் - 1,2ற்கான முகாம் கீழ ரதவீதி, புளியங்குடி கனக பாலாஜி திருமண மண்டபத்திலும், ஆழ்வார்குறிச்சி பேரூராட்சியில் வார்டு எண் - 1-7ற்கான முகாம் ஆழ்வார்குறிச்சி, வள்ளி அனந்த ராமகிருஷ்ணன் அரங்கம் ஸ்ரீ பரம கல்யாணி மேல்நிலைப் பள்ளி வளாகத்திலும், ஆலங்குளம் வட்டாரத்திற்கான முகாம் புதுப்பட்டி மெயின் ரோடு ஊராட்சி சமுதாய நலக்கூடத்திலும், வாசுதேவநல்லூர் வட்டாரத்திற்கான முகாம் நெல்கட்டும் செவல் பூலித்தேவர் திருமண மண்டபத்திலும், சங்கரன்கோவில் வட்டாரத்திற்கான முகாம் வீரசிகாமணி சமுதாய நலக்கூடத்திலும், செங்கோட்டை வட்டாரத்திற்கான முகாம் புளியரை சமுதாய நலக்கூடத்திலும் நடைபெறவுள்ளது.

தென்காசி மாவட்டத்தில் 15.07.2025 முதல் 23.10.2025 முடிய 48 நகராட்சியில், 56 பேரூராட்சியில் மற்றும் 178 ஊரகப்பகுதிகளில் மொத்தம் 282 முகாம்கள் நடைபெறவுள்ளது.

இத்திட்டத்தில் தன்னார்வலர்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று முகாம் நடைபெறும் நாள், இடம், அங்கு வழங்கப்படவுள்ள சேவைகள் குறித்தும் தெரிவிப்பர். பொதுமக்கள் பயனடைவதற்கு தேவையான தகுதிகள் மற்றும் ஆவணங்கள் குறித்தும் தெரிவிப்பார். அரசிடமிருந்து வரப்பெற்றுள்ள கையேடு மற்றும் விண்ணப்பத்தினை வழங்குவார்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை (KMUT) பெறுவதற்கு "உங்களுடன் ஸ்டாலின்" முகாம் நடக்கும் இடத்தில் மட்டுமே விண்ணப்பம் வழங்கப்படும்.

தகுதியுள்ள மகளிர் நேரடியாக முகாமிற்கு சென்று விண்ணப்பங்களைப் பெற்று அங்கேயே விண்ணப்பிக்க வேண்டும்.

நகர்ப்புறத்தில் 13துறைகள் சார்பாக 43சேவைகளும், ஊரகப்பகுதியில் 15துறைகள் சார்பில் 46சேவைகளும் இந்த முகாம்களில் வழங்கப்படும்.இந்த முகாம்களில் மருத்துவ சேவை வழங்க மருத்துவ முகாம்கள் நடத்தப்படும்.காவல்துறையினரால் "May I help you"தகவல் உதவி மையம் அமைக்கப்படும்.

இம்முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் மீது 45 நாட்களுக்குள் உரிய நடவடிக்கை மேற்கொண்டு முடிவு செய்யப்படும்.இந்த முகாம்களை நடத்திட வட்டார அளவில் 10 பொறுப்பு அலுவலர்களும், பேரூராட்சி மற்றும் நகராட்சி பகுதிகளுக்கு 33 பொறுப்பு அலுவலர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.வட்ட அளவில் துணை ஆட்சியர் நிலையில் 8 கண்காணிப்பு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் பொதுமக்கள் அவர்களது பகுதிகளில் நடைபெறும் முகாமில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், மாவட்டம் முழுவதும் முகாம்கள் தேதி வாரியாக நடைபெற உள்ளது. அந்தந்த பகுதிவாழ் மக்கள் அவர்கள் பகுதிக்குரிய முகாமில் மட்டுமே கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். எனவே, அனைவரும் ஒரே முகாமில் கலந்து கொள்வதை தவிர்க்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இக்கூட்டத்தில். மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், தனித்துணை ஆட்சியர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) நம்பிராயர் மற்றும் அனைத்து செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், ஒளிப்பதிவாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தின பூமி நாளிதழ் படியுங்கள்

# இலஞ்சி பாரத் வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளியில் கல்வி வளர்ச்சி நாள் விழா



**குற்றாலம் ஜூலை.15:** இலஞ்சி பாரத் வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளியில் காமராஜர் பிறந்தநாளை கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு பள்ளி முதல்வர் கிஃப்ட் சன் கிருபாகரன் முன்னிலை வகித்தார்.மாணவி அக்ஷரா குழுவினர் இறைவணக்கம் பாடினர். மாணவி சயூரா நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். மாணவி அனுஷா வரவேற்புரையாற்றினார்.

மாணவி காவ்யா வரவேற்பு நடனம் ஆடினார். நவீன் குழுவினர் தெருக்கூத்து மூலம் கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தனர்.

அபர்னா குழுவினர் காமராஜர் பற்றி பாடல்கள் பாடினார். மாணவி நித்யசென்பகா குழுவினர் கல்வியால் நாம் மேன்மை அடைவதற்கு காரணம் மதிப்பெண்ணா? ஒழுக்கமா ? என்ற பட்டிமன்றத்தை நிகழ்த்தினர் . இறுதியாக சஞ்சு ஶ்ரீ லட்சுமி நன்றியுரையாற்றினார்.

கல்வி வளர்ச்சி நாள் விழா கொண்டாட்டத்திற்கு பாரத் கல்விக் குழுமத் தலைவர் மோகனகிருஷ்ணன் மற்றும் செயலாளர் முனைவர் காந்திமதி மோகன கிருஷ்ணன் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.



தென்காசி தெற்கு மாவட்டம் கீழப்பாவூர் மேற்கு ஒன்றியம் செட்டியூரில் ஸ்ரீ தேரடி விநாயகர் திருக்கோவில் கும்பாபிஷேக விழா நிகழ்ச்சியில் தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன் கலந்து கொண்டு நன்கொடை வழங்கினார். உடன் கீழப்பாவூர் தெற்கு ஒன்றிய செயலாளர் ஜே.கே.ரமேஷ் மற்றும் நிர்வாகிகள் கோவில் கமிட்டி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# ஆசிரியர் கல்வியை கற்பிப்பதில் இலஞ்சி கல்லூரி சிறப்பிடம்: பள்ளிக் கல்வித்துறை மாவட்ட திட்ட அலுவலர் பாராட்டு



**தென்காசி ஜூலை.15:** இலஞ்சியில் உள்ள டிடிடிஏ டிஎஸ் டேனியல் ராஜம்மாள் பிஎட் கல்லூரியில் விளையாட்டு விழா, இளைஞர் தின விழா மற்றும் உணவு திருவிழா நடைபெற்றது. விழாவிற்கு கல்லூரி தாளாளர் ராஜகுமார் தலைமை வகித்தார் முதல்வர் முனைவர் கலா வின்சிலா முன்னிலை வகித்தார். உதவி பேராசிரியர் ஷீலா நவரோசி வரவேற்றார். பள்ளி கல்வித்துறை மாவட்ட திட்ட அலுவலர் காதர் முகைதீன் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ ஆசிரியர்களுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டி பேசினார்.

சுரண்டை காமராஜர் காய்கறி மார்க்கெட் வியாபாரிகள் சங்க தலைவர் ஏகேஎஸ்டி சேர்ம செல்வம், செங்கோட்டை அரசு நூலகர் ஒய்வு ராமசாமி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். பள்ளிக்கல்வித்துறை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தயாளன், வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் ஐயப்பன், சுப்பிரமணியன் ஆகியோர் வாழ்த்தி பேசினர்

தொடர்ந்து மாணவ ஆசிரியர்கள் கலை நிகழ்ச்சிகள் நடந்தது. இதில் உதவி பேராசிரியர்கள் ஜெனிபர், லீதியாள் சொர்ண ஜெயா, ஐரீன், நூலகர் முனைவர் ஏஞ்சலின், அனிதா, அலுவலக பணியாளர்கள் ப்ரெட்ரிக், ஷேரன், பேதுரு, லட்சுமி, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ஐசக் நன்றி கூறினார்

# தென்காசி மாவட்டத்தில் பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்: கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் தலைமையில் நடைபெற்றது



**தென்காசி ஜூலை.15** தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், தலைமையில் நடைபெற்றது.

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் பெற்றுக் கொண்டார்.உலக இளைஞர் திறன் நாளை முன்னிட்டு நடைபெற்ற கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி மற்றும் Project Exhibition ஆகியவற்றில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு கேடயங்கள் மற்றும் நற்சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் தென்காசி மாவட்ட ஊரக வளர்ச்சிப் பிரிவுக்கு வழங்கிய ஈப்புகளை தென்காசி, ஆலங்குளம், கடையம், சங்கரன்கோவில் வட்டார வளர்ச்சி அலுவலர்களிடமும், மாவட்ட ஊராட்சி செயலரிடமும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஒப்படைத்தார்.

மேலும், இக்கூட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டா, முதியோர் உதவித்தொகை, அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரக்கோருதல், பட்டா மாறுதல், மாற்றுத் திறனாளிகள் உதவித்தொகை மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 480 மனுக்கள் பெறப்பட்டது. பெறப்பட்ட மனுக்கள் தகுதி வாய்ந்த மனுக்களாக உள்ளதா என்பதை விசாரணை செய்து விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரர்களுக்கு உரிய பதில் அளிக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில்,மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், மாவட்ட ஊரகவளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தண்டபாணி, தனித்துணை ஆட்சியர் (சமூகப் பாதுகாப்புத்திட்டம்) நம்பிராயர் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள்கலந்து கொண்டனர்.

# காரிசாத்தான் ஊராட்சி அலுவலக புதிய கட்டிடம்: ராஜா எம்எல்ஏ.திறந்து வைத்தார்



**சங்கரன்கோவில். ஜூலை.15-** தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி குருவிகுளம் ஒன்றியத்திற்கு உட்பட்ட காரிசாத்தான் கிராமத்தில் மகாத்மா காந்தி ஊரக வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூபாய் 23.57 லட்சம் மதிப்பீட்டில் புதிய ஊராட்சி அலுவலகம் திறக்கும் நிகழ்ச்சி நடந்தது.

நிகழ்ச்சிக்கு வடக்கு மாவட்ட திமுக செயலாளர் ராஜா எம்எல்ஏ தலைமை வகித்தார். குருவிகுளம் யூனியன் சேர்மன் விஜயலட்சுமி, காரிசாத்தான் பஞ்சாயத்து தலைவர் வீராசாமி முன்னிலை வகித்தனர். தொடர்ந்து புதிய கட்டிடத்தை ராஜா எம்எல்ஏ திறந்து வைத்தார்.

இதில் சங்கரன்கோவில் யூனியன் சேர்மன் லாலாசங்கரபாண்டியன், ஐந்திணை மக்கள் கட்சி தலைவர் தேவதாஸ், குருவிகுளம் மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் சேர்மத்துரை, ஒன்றிய கவுன்சிலர் முத்துசாமி, ஒன்றிய துணைச் செயலாளர் பரமசிவன், மாவட்ட பிரதிநிதி பொன்னுத்தாய், கிளை கழகச் செயலாளர்கள் பாலு, பாலுசாமி, சின்னத்துரை, எழிலன், வேல்ராஜ், பால்சாமி, சரவணன்,தங்கவேலு, குருவிகுளம் கலைச்செல்வன், பஞ்சாயத்து துணைத் தலைவர் மல்லிகா, வார்டு உறுப்பினர்கள் வளர்மதி, பாலமுருகன், மலையரசி, சண்முகசுந்தரம், முத்தையா, கற்பகவள்ளி, சின்னத்துரை, காந்தி மற்றும் ஊர் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக இந்த நிகழ்ச்சியில் தேவேந்திர வேளாளர் கூட்டமைப்பை சேர்ந்த முத்துக்குமார் என்பவர் திமுகவில் ராஜா எம்எல்ஏ முன்னிலையில் தன்னை இணைந்து கொண்டார்.



**நர்சரி - பிரைமரி பள்ளி தென்காசி மாவட்ட அனைத்து பள்ளிகள் சார்பாக மாவட்ட நோடல் செயலாளர் இந்தியன் நர்சரி பிரைமரி பள்ளி வாசுதேவன், பொருளாளர் லூமினாஸ் பள்ளி ஜெயாலெட்சுமி, இலஞ்சி சங்கர வித்யாலயா பள்ளி இலஞ்சிகுமரன் ஆகியோர் மரியாதை நிமித்தமாக சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.**

# ஓவியப் போட்டி: இலஞ்சி பாரத் மாண்டிசோரி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவிக்கு சிறப்பு பரிசு



**குற்றாலம் ஜூலை.15** திருநெல்வேலி மாவட்ட அறிவியல் மையத்தில் உலக மக்கள் தினத்தை முன்னிட்டு ஓவியப்போட்டி நடைபெற்றது. 15 பள்ளிகளில் இருந்து 96 க்கும் மேற்பட்ட மாணவ - மாணவியர்கள் கலந்து கொண்டனர். அப்போட்டியில் பாரத் மாண்டிசோரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பு பயிலும் மாணவி மிருதுளா ஜனனி கலந்து கொண்டு சிறப்பு பரிசினை வென்றுள்ளார். பரிசு பெற்ற மாணவியை பாரத் கல்வி குழுமத்தின் தலைவர் மோகன் கிருஷ்ணன், செயலாளர் டாக்டர் காந்திமதி மோகன கிருஷ்ணன், கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ், இயக்குனர் இராதா பிரியா, பள்ளி முதல்வர் பாலசுந்தர், தலைமை ஆசிரியர் செல்வலிங்கம் ஆகியோர் பாராட்டினர்.



**தென்காசி மாவட்டம் கீழப்பாவூர் ஒன்றியம் சிவநாடானூர் ஊராட்சி மடத்தூர் சுப்பிரமணியபுரம் கிளைக்கழகத்தில் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர்கள் சேர்க்கும் நிகழ்ச்சி ஒன்றிய பொறுப்பாளர் ஜே.கே.ரமேஷ் தலைமையில் வே.ராமர், பூமணி, கடல்மணி , கிளைசெயலாளர்கள் சண்முகவேல், அந்தோணி , இணையதள இளைஞர்கள் பிரின்ஸ், குமார் கலந்து கொண்டனர்**

